1981 ஆகஸ்ட் 24]

கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம், வீரியங்கோட்டை.

*வினா எண். 30—திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணித் தொகுதி டி. 1218-வீரியங்கோட்டை கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம் நிர்வாகக் குழு பற்றிய துணை விதி திருத்தம் செய்யப்பட்டு இதுவரையில் அமுல்படுத்தப்படாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) கால தாமதம் ஏற்படுவதற்குரிய காரணத்தை அறிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) தஞ்சாவூர் வட்டார இணைப்பதிவாளரின் 1979-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 17-ஆம் நாள் தீர்ப்பாணை மீது மேல்முறையீடு நிலுவையாய் இருந்ததால் இணைப்பதிவாளர் முன்மொழிந்துள்ள துணைவிதித் திருத்தம் அமுலாக்கப்பட முடியாமல் உள்ளது.

(ஆ) எந்தக் காரணக்கூறு (factor) அடிப்படையில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்பது முடிவு செய்ய வேண்டியிருந்தது. தற்போது மக்கள் தொகை அடிப்படையில் சங்க நிர்வாகக்குழுவில் பிரதிநிதித்துவம் அளிப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

கோவில்பட்டி தாலுக்காவிலுள்ள கிராமங்களுக்கான குடிநீர்த் திட்டம்.

*வினா எண். 31—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

கோவில்பட்டித் தாலுக்காவிலுள்ள சிந்தலக்கரை துரைச்சாமிபுரம், ஆர். வெங்கடேசுவரபுரம் ஆகிய கிராமங்களுக்கு எட்டயபுரம் வரை வரும் தாமிரபரணி தண்ணீரைக் கொண்டு செல்ல அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தாமிரபரணி ஆற்றை ஆதாரமாகக் கொண்டுள்ள எட்டையபுரம் குடிநீர்த் திட்டத்தில் இம்மூன்று சிற்றூர்கள் சேர்க்கப்படவில்லை. இருப்பினும் சீனியம்பட்டி என்னும் சிற்றூரில், ரூபாய் 8.77 இலட்சம் செலவில் ஒரு ஆழ்துளை கிணறு அமைத்து, அம்மூன்று சிற்றூர்களுக்கும் குடிநீர் வழங்க ஒரு திட்டம், குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.